தினமணி

**நெல், பருத்தி குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்வு**

First Published : 10 Jun 2011 02:43:10 AM IST

புது தில்லி, ஜூன் 9: நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.80-ம், பருத்திக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.300-ம் உயர்த்தப்பட்டுள்ளது.

பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டம் தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த முடிவு செய்யப்பட்டது.

அனைவருக்கும் உணவு அளிக்க வேண்டுமென்ற தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை முறையாக அமல்படுத்த, நடப்பு காரிஃப் பருவத்தில் இருந்தே உற்பத்தியை அதிகரிக்க ஊக்கமளிக்கவும் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.1,080, முதல்தர நெல் குவிண்டாலுக்கு ரூ.1,110 என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முன்னதாக நெல்லுக்கு ரூ.1,160 விலை கொடுக்க வேண்டுமென மத்திய வேளாண் அமைச்சகம் சார்பில் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் இது அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.இதுதவிர பருப்பு வகைகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ. 400 உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பருப்புக்கான விலை ரூ.3,300 ஆக அதிகரித்துள்ளது. உள்நாட்டுப் பருப்பு தேவை பெருமளவில் இறக்குமதி மூலம் நிறைவு செய்யப்படுகிறது. எனவே உள்நாட்டில் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் பருப்புக்கான ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளது.

நடப்பு சீசனில் கூடுதலாக 10 லட்சம் பேல் பருத்தி ஏற்றுமதி செய்ய மத்திய அமைச்சர்கள் குழு அனுமதி அளித்தது. பருத்தி ஏற்றுமதியை அதிகரிக்கலாமா என ஆலோசிக்க மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையில் அமைச்சரவைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. செப்டம்பரில் முடியும் பருத்தி சாகுபடி சீசனில் கடந்த சீசனில் கிடைத்ததைவிட கூடுதலாக 15 லட்சம் பேல் பருத்தி மகசூல் கிடைக்கும் என மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார்.

இதையடுத்து, கூடுதலாக 10 லட்சம் பேல் பருத்தியை ஏற்றுமதி செய்ய அமைச்சர்கள் குழு அனுமதி அளித்தது. கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் ஆனந்த் சர்மா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

**14-ல் வாழை நார் பிரித்தெடுக்கும் பயிற்சி**

First Published : 09 Jun 2011 02:32:46 PM IST

நாமக்கல், ஜூன் 8: நாமக்கல்லில், வாழை மட்டையிலிருந்து நார் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பங்கள் குறித்த இலவச பயிற்சி முகாம் வரும் 14-ம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் வெளியிட்ட செய்தி:

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வாழை மட்டையிலிருந்து நார் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி நடைபெறவுள்ளது.

இதில் வாழை நாரின் முக்கியத்துவம், வாழை நார் பிரித்தெடுப்பதற்கு மட்டை தேர்வு செய்யும் முறை, இயந்திரம் மூலம் வாழை நார் பிரித்தெடுத்தல், வாழை நாரை பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் மற்றும் அதிலிருந்து தயாரிக்கப்படும் பொருள்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தங்களது பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். தொடர்புக்கு 04286-266345, 266244, 266650.

**லாபம் தரும் நிலக்கடலை விதை உற்பத்தி**

தே.சாலமன்

First Published : 09 Jun 2011 01:43:46 PM IST

செய்யாறு: உரிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தரமான நிலக்கடலை விதைகளை உற்பத்தி செய்தால் அதிக லாபம் பெறலாம் என ஹைதராபாத் மித வெப்ப மண்டல பயிர்களுக்கான பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவை யோசனை தெரிவித்துள்ளன.

வகைகள்:

கரு விதை, வல்லுநர் விதை (100 விழுக்காடு இனத்தூய்மை), ஆதார விதை, சான்று விதை என 4 வகை விதைகள் உள்ளன. கரு விதை மற்றும் வல்லுநர் விதை இரண்டும் வல்லுநர்களின் மேற்பார்வையில் ஆராய்ச்சி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆதார விதை மற்றும் சான்று விதை அரசு விதைப்பண்ணைகளிலும், விவசாயிகளின் வயல்களிலும் வேளாண் துறை அலுவலர்களின் கண்காணிப்பில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

விதைத் தேர்வு:

விதைகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களான வேளாண்மை பல்கலைக்கழகங்கள், மாநில விதை நிறுவனங்கள், மத்திய விதை நிறுவனங்கள், வேளாண் துறை மற்றும் பதிவு பெற்ற தனியார் விதை நிறுவனங்கள் இவைகளில் ஏதேனும் ஒன்றிலிருந்து பெற வேண்டும்.

பெறப்பட்ட விதைகளை காற்றோட்டமுள்ள உலர்ந்த அறைகளில் சேமிக்க வேண்டும். உடைந்த, நிறம் மாறிய, சுருங்கிய சிறிய பருப்புகளை பிரித்து எடுத்து விட்டு நல்ல தரமான விதைகளையே உபயோகிக்க வேண்டும்.

பட்டம்:

மார்கழி பட்டம் (நவம்பர் - மார்ச்) நல்ல மகசூல் தரவல்லது. ஆனால் அறுவடையின் போது நிலவும் கோடை வெப்பத்தில் விதைகளின் முளைப்புத்திறன் பாதிக்க வாய்ப்புள்ளதால் போதுமான முன்னெச்சரிக்கையுடன் விதைகளை உலர்த்த வேண்டும்.

நிலத்தை தேர்ந்தெடுத்தல்:

நல்ல வளமான, நீர் ஆதாரத்துக்கு அருகில் உள்ள, சமமான, நல்ல வடிகால் வசதி உள்ள, மணற்பாங்கான நிலத்தை தேர்வு செய்ய வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட நிலமானது முந்தைய இரண்டு பட்டங்களில் நிலக்கடலை பயிரிடப்படாததாக இருத்தல் வேண்டும்.

பயிர் விலகு தூரம்:

ஒரு ரகத்துக்கும் மற்றொரு ரகத்துக்கும் குறைந்த அளவு 3 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும்.

நிலத்தை தயார் செய்தல்:

சுமார் 15 - 20 செ.மீ. ஆழம் வரை நல்ல புழுதி இருக்கும்படி நன்றாக உழுதுகொள்ளவேண்டும். சமதள பாத்திகளை விட ஆழச்சால் அகலப் பாத்திகள் விதை உற்பத்திக்கு சிறந்தது.

உர நிர்வாகம்:

நிலக்கடலைக்கு முந்தைய பயிருக்கு நல்ல உரமிட்டிருந்தால் எஞ்சிய சத்துகளை நிலக்கடலை எடுத்துக் கொள்ளும். மண்ணின் கார, அமிலத்தன்மையை நிர்ணயிக்கக் கூடிய டஏ அளவு 6.0 முதல் 6.3 என்ற அளவில் இருத்தல் வேண்டும்.

அடியுரமாக மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் ஹெக்டேருக்கு 12.5 டன்கள் இட வேண்டும். மண் ஆய்வு செய்து அதன்படி ரசாயன உரமிடுதல் சிறந்தது. மண் பரிசோதனை செய்ய இயலாத நிலையில், ஹெக்டேருக்கு 17:35:50 கிலோ தழை, மணி மற்றும் சாம்பல் சத்து தரக்கூடிய அளவில் ரசாயன உரங்களை இடலாம்.

விதை நேர்த்தி:

விதைப்பதற்கு 1-2 நாள்கள் முன்னதாக தரமான நிலக்கடலை பருப்புகளுடன் ஒரு கிலோ விதைக்கு திரம் 2 கிராம் (அல்லது) கார்பெண்டசிம் 2 கிராம் (அல்லது) டிரைகோடெர்மா விரிடி 4 கிராம் கலந்து விதை நேர்த்தி செய்யலாம்.

விதைப்பு:

ஒரு குழியில் ஒரு விதை மட்டுமே விதைக்க வேண்டும். விதைகளை 5 செ.மீ. ஆழத்துக்கு மிகாமல் விதைக்க வேண்டும். விதைக்கும் போது மண்ணில் போதுமான ஈரம் இருத்தல் வேண்டும்.

நீர் நிர்வாகம்:

பாசனத்துக்குத் தெளிப்பான்களை உபயோகிப்பதே சிறந்தது. விதைகள் முளைத்த பின் பூக்கும் பருவத்துக்கு இடைப்பட்ட காலத்தில் பயிரைச் சற்று காய விட வேண்டும். இதனால் செடிகளில் தேவையற்ற வளர்ச்சி கட்டுப்படுத்தப்படுவதுடன் நோய்களின் தாக்குதலும் குறைவாக இருக்கும்.

விழுதுகள் பூமியில் இறங்கிய பின் நிலத்தில் போதுமான ஈரம் இருக்குமாறு லேசான நீர்ப்பாசனம் தொடர்ந்து கொடுக்க வேண்டும். நிலத்தில் பாசன நீரோ, மழை நீரோ தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

களை நிர்வாகம்:

நிலக்கடலை விதைத்த உடன் ப்ளுக்குளோரலின் (அ) பென்டிமெத்தலீன் 2 லிட்டர் என்ற அளவில் களைக்கொல்லி இட்டுக் களைகளைக் கட்டுப்படுத்தலாம். விதைத்த பின் சுமார் 30 நாள்களில் கைக்களை எடுக்க வேண்டும்.

விதைத்த சுமார் 45 நாள்களில் ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும்.

நிலக்கடலை பயிருக்கு தேவையான சுண்ணாம்பு மற்றும் கந்தகச் சத்தை அளிக்க அடியுரமாக ஹெக்டேருக்கு 200 கிலோ ஜிப்சம், மேலும் விதைத்த 45-வது நாளில் 200 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும்.

ஊட்டச் சத்துக் கரைசல் தெளித்தல்:

மகசூலை அதிகரிக்க விதைத்த 25 மற்றும் 35-ம் நாள்களில் பூக்கும் தருணத்தில் ஊட்டச்சத்து தெளிக்கவும். ஹெக்டேருக்கு டிஏபி 2.5 கிலோ, அமோனியம் சல்பேட் 1 கிலோ, போரிக் அமிலம் (போராக்ஸ்) 500 கிராம், பிளானோபிக்ஸ் (பயிர் ஊக்கி) 440 மி.லி., தண்ணீர் 500 லிட்டர் இவைகளைக் கைத்தெளிப்பானால் தெளிக்க வேண்டும்.

பயிர் பாதுகாப்பு:

பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் தென்பட்ட உடன் பரிந்துரைக்கப்படும் பூச்சி மற்றும் பூஞ்சாணக் கொல்லி மருந்துகளை தெளித்துக் கட்டுப்படுத்துவதன் மூலம் மகசூல் இழப்பைத் தவிர்க்கலாம்.

சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைப்பேன், தத்துப்பூச்சி, அசுவிணி பூச்சிகளுக்கு இமிடாகுளோப்ரிட் 200 எஸ்.எல். 100 மி.லி. (அ) டைமெத்தோயேட் 1000 மி.லி. தெளித்து கட்டுப்படுத்தலாம்.

சுருள் பூச்சிகளுக்கு டைமெத்தோயெட் 1000 மி.லி. (அ) எண்டோசல்பான் 1000 மி.லி. தெளிக்கலாம்.

இலைகளை உண்ணும் பூச்சிகளான புரோடினியா புழு, பச்சைப்புழு, கம்பளிப்புழு ஆகியவற்றைக் கட்டுப்படுத்த ஸ்பைனாசர்ட் 150 மி.லி. (அ) இன்டாக்ஸா கார்ப் 250 மி.லி. (அ) பெனவலரேட் 500 மி.லி. (அ) எண்டோசல்பான் 1000 மி.லி. தெளித்து கட்டுப்படுத்தலாம்.

பூஞ்சாணக் கொல்லி நோய்களான துருநோய், இலைப்புள்ளி நோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த குளோரோதலோனில் 1000 கிராம் (அ) கார்பெண்டசிம் 500 கிராம் (அ) மான்கோசெப் 1000 கிராம் தெளிக்கலாம்.

கலவன் நீக்குதல்:

இரண்டு அல்லது மூன்று முறை கலவன் பயிர்கலை நீக்க வேண்டும். மெலிந்த, நோய்கள் தாக்கிய, மாறுபட்ட குணாதிசயங்களை கொண்ட மற்றும் வரிசையிலிருந்து தள்ளி முளைத்த செடிகளை அகற்ற வேண்டும்.

வயல் ஆய்வு:

பயிர் பூக்கும் பருவத்திருந்து அறுவடைக்குள் இரண்டு முறை விதைச்சான்று அலுவலரால் வயலாய்வு செய்யப்பட வேண்டும்.

அறுவடை:

நன்கு முற்றிய நிலக்கடலை பயிரை சரியான நேரத்தில் அறுவடை செய்ய வேண்டும். முன்னதாக அறுவடை செய்தாலோ அல்லது கால தாமதமாக அறுவடை செய்தாலோ மகசூல் பாதிக்கப்படுவதோடு விதையின் தரமும் பாதிக்கப்படும்.

இலைகள் மஞ்சள் நிறம் அடைந்த உடன் சில செடிகளை பிடிங்கி அதில் எத்தனை காய்களில் உள் ஓடு கருமை நிறம் அடைந்துள்ளது என்பதை கணக்கிட வேணடும்.

கொத்து ரகங்களாக இருப்பின் 75-80 சதம் காய்கள் உள் ஒடு கருமை நிறம் அடைந்த நிலையும், அடர் கொத்து மற்றும் கொடி ரகங்களாக இருப்பின் 70-75 சதம் காய்கள் உள் ஓடு கருமை நிறம் அடைந்த நிலையும் அறுவடைக்கு உகந்தது.

நிலக்கடலை அறுவடையின் போது செடிகளை பிடிங்கி மண்ணை உதறிவிட்டு காய்கள் மேல்பக்கம் இருக்குமாறு போட வேண்டும்.

அறுவடையின் போது மண்ணில் தங்கும் காய்களை தனியாக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அவைகளை செடிகளிலிருந்து அறுவடை செய்த விதைகளுடன் கலக்கக்கூடாது.

உலர வைத்தல்:

பிடிங்கிய செடிகளை 2-3 நாள்கள் காய விட்டு காய் பிரிக்கும் இயந்திரங்களின் மூலமாகவோ அல்லது கைகளினாலோ காய்களை பறிக்க வேண்டும். இவற்றிற்கு முறையே 18-20 சதவீதம் ஈரப்பதமும், 15 சதவீதம் ஈரப்பதமும் உள்ள நிலை உகந்தது.

கோடைப் பட்டத்தில் பயிரிடப்படும் விதை, அறுவடைக்கு வரும் தருணத்தில் நிலவும் அதிக வெப்பத்தால் விதைகளின் முளைப்புத்திறன் பாதிக்கும். எனவே அறுவடையின் போது காய்களில்

நேரடியாக வெயில் படுவதை தவிர்க்க வேண்டும். எனவே காய்கள் உள்பக்கம் வருமாறு செடிகளை குவியலாக அடுக்கி வைப்பதன் மூலம் வெயிலின் பாதிப்பை தவிர்க்கலாம்.

காய்களை பிரித்தெடுப்பதற்கு தடிகளினால் அடிப்பதையோ, வேறு பொருள்களின் மீது அடிப்பதோ கூடாது. இதனால காய்களில் காயம்படுவதை தவிர்க்கலாம். பிரித்தெடுக்கப்பட்ட காய்களை 3-4 நாள்கள் நன்கு உலர்த்தி ஈரப்பதம் 9 சதம் வந்தவுடன் சேமிக்க வேண்டும். கோடை பட்டத்தில் பயிரிடப்படும் விதைப்பண்ணை அறுவடையின் போது வெப்பம் அதிகம் இருக்குமாதலால் காய்களை நிழலில் உலர்த்தி முளைப்புத்திறன் பாதிக்கப்படுவதை தவிர்க்கலாம்.

விதை சுத்திகரிப்பு:

விதைகளை சுத்தம் செய்யும் போது காயம்பட்ட, அழுகிய, முளைத்த காய்களை அகற்ற வேண்டும். விதைகளை தரம் பிரிக்கும் போது சரியாக முதிராத பொக்குக்காய்களை அகற்ற வேண்டும். காய்களில் ஒட்டிக் கொண்டுள்ள காம்புகள், இலை, தழை, மண் போன்ற குப்பைகளை முழுவதுமாக நீக்கி நல்ல தரமான விதை காய்களை மட்டுமே சேமிக்க வேண்டும்.

விதை ஆய்வு:

விதைச்சான்று அலுவலர் விதைக்குவியலில் இருந்து மாதிரிகள் எடுத்து ஆய்வுக்கு அனுப்பி வைப்பார்.

விதை மாதிரிகள் விதை சோதனைக் கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் முடிவுகள் சுமார் 30 நாள்களில் தெரிய வரும்.

மேலும் விவரங்களுக்கு "பேராசிரியர் - தலைவர், எண்ணெய்வித்துத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641003, போன் 0422 -2450812 மற்றும் பேராசிரியர் - தலைவர் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம் - 604 001 என்ற முகவரிகளில் தொடர்புகொண்டு தெரிந்து கொள்ளலாம் என செய்யாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தெரிவித்துள்ளார்.

## நெல், மணிலாவில் நுண்ணூட்டச் சத்து மேலாண்மை

First Published : 09 Jun 2011 01:44:05 PM IST

திருவண்ணாமலை: நெல், மணிலா சாகுபடியில் நுண்ணூட்டச் சத்து மேலாண்மையைக் கடைபிடித்து அதிக லாபம் பெறலாம் என வேளாண்மைத் துறையினர் யோசனை தெரிவித்துள்ளனர்.

யூரியா, டிஏபி மற்றும் பொட்டாஷ் போன்ற உரங்களை மட்டுமே பயிருக்கு இடும்போது, முதன்மை சத்துகளான நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் மட்டுமே பயிருக்கு கிடைக்கின்றன.

ஆனால், நல்ல மகசூல் பெற இந்த முதன்மை சத்துகளுடன் போரான், இரும்பு, துத்தநாகம் மற்றும் மாலிப்டினம் போன்ற நுண்ணுட்டச் சத்துகளும் அவசியமாகிறது.

நெல் பயிரில் நுண்ணூட்டக் குறைபாடு:

நெல் பயிரில் இரும்பு, துத்தநாகம், மற்றும் மக்னீசியம் சத்து குறைபாடு காரணமாக மகசூல் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது.

மக்னீசிய சத்து குறைப்பாட்டை ஏற்பட்டால் இலைகளின் நுனியில் வெள்ளைப் புள்ளிகளுடனும், மஞ்சள் தேமலுடன் காணப்படும். துத்தநாகக் குறைபாடு காரணமாக இலைகள் துருப்பிடித்த தோற்றத்தை பெறுகின்றன. இந்த நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை ஏக்கருக்கு 10 கிலோ நெல் நுண்ணூட்டச் சத்து இடுவதின் மூலம் குறைக்கலாம்.

மணிலாவில் நுண்ணூட்டச் சத்து குறைபாடு:

மணிலாவில் போரான், இரும்பு மற்றும் கந்தக சத்து குறைப்பாட்டால் மகசூல் வெகுவாகக் குறைகிறது. மணிலாவில் இரும்புச் சத்து குறைவால் இலைகளுக்கு இடையே பச்சயம் குறைந்து வேர் வளர்ச்சி குறைந்து காணப்படுகிறது.

போரான் சத்து குறைவால் செடியின் வளர்ச்சி குறைந்து குட்டையான புதர் போன்ற அமைப்பு ஏற்படுகிறது. கந்தகச்சத்து குறைவால் செடியின் தண்டு வளர்ச்சி குறைந்து சன்னமான தண்டுடன் காணப்படுகிறது.

இந்த சத்துகள் குறைபாட்டால் மகசூல் குறைவதைத் தவிர்க்க ஹெக்டேருக்கு 12.5 கிலோ மணிலா நுண்ணூட்டக் கலவை இடுவதுடன் ஏக்கருக்கு 400 கிலோ ஜிப்சம் இடலாம்.

நெல், மணிலா நுண்ணூட்டக் கலவைகளும், ஜிப்சமும் மானிய விலையில் வேளாண்மை விரிவாக்க மையங்களிலேயே கிடைக்கின்றன.

எனவே, விவசாயிகள் இவ்வாய்ப்பை பயன்படுத்தி நல்ல மகசூல் பெறலாம் என கீழ்பென்னாத்தூர் வேளாண் உதவி இயக்குநர் ரமணன், வேளாண் அலுவலர் முத்துராம் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

**உணவு பொருள் பணவீக்கம் 9 சுதவீதமாக அதிகரிப்பு**

ஜூன் 10,2011,00:02



புதுடில்லி: -நாட்டின் உணவு பொருள் பணவீக்கம், மே 28ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், 9.01 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 8.06 சதவீதமாக குறைந்து காணப்பட்டது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், பழங்கள், காய்கறிகள், புரதப் பொருள்களின் விலை மிகவும் அதிகரித்திருந்தது. இதன் காரணமாகவே, நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.கடந்த இரண்டு மாதங்களுக்கு பின், தற்போது தான், உணவுப் பொருள் பணவீக்கம் இந்த அளவிற்கு உயர்ந்துள்ளது. இரண்டு மாதங்களாக, இப்பணவீக்கம் 8 சதவீதம் என்ற அளவில் தான் இருந்தது. இதற்கு முன்பாக, 2010, @ம மாதத்தின், கடைசி வாரத்தில், உணவுப் பொருள் பணவீக்கம் மிக அதிகபட்சமாக, 20.62 சதவீதம் என்ற அளவில் இருந்தது.கணக்கீடு செய்வதற்கு எடுத்து கொள்ளப்பட்ட வாரத்தில், பழங்கள் விலை 30.78 சதவீதமும், வெங்காயத்தின் விலை 14 சதவீதமும் அதிகரித்திருந்தது. மேலும், பால் (8.49 சதவீதம்) முட்டை, இறைச்சி மற்றும் மீன் ( 6.99 சதவீதம்), உணவு தானியங்கள் (5.77 சதவீதம்) ஆகியவற்றின் விலையும் உயர்ந்திருந்தது.இருப்பினும், ஆண்டுக்கணக்கில் ஒப்பிடும் போது, பருப்பு வகைகளின் விலை, 9.49 சதவீதமும், காய்கறிகள் விலை 0.20 சதவீதமும், உருளைக்கிழங்கு விலை 2.87 சதவீதம் குறைந்திருந்தது. உணவுப்பொருள் அல்லாத பொருள்கள் பிரிவில், நூலிழைகள் விலை 56.56 சதவீதம் அதிகரித்திருந்தது. மேலும், தாதுப் பொருள்கள் (12.11 சதவீதம்) எரிபொருள் மற்றும் மின்சாரம் (12.46 சதவீதம்) பெட்ரோல் (33.23 சதவீதம்) ஆகியவற்றின் விலையும் அதிகரித்திருந்தது.சென்ற மே முதல் வாரத்தில், உணவுப் பொருள் பணவீக்கம், 18 மாதங்களில் இல்லாத அளவிற்கு, 7.47 சதவீதம் என்ற அளவில் குறைந்திருந்தது.நாட்டின் ஒட்டுமொத்த பணவீக்கம் சென்ற ஏப்ரல் மாதத்தில், 8.66 சதவீதம் என்ற

அளவில் மிகவும் அதிகரித்திருந்தது.

**சென்ற ஐந்து மாதங்களில் பாக்கு விலை 26 சதவீதம் உயர்வு**

ஜூன் 10,2011,00:01



பெங்களூரு: வடஇந்தியாவைச் சேர்ந்த குட்கா தயாரிப்பாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள், கர்நாடகத்தில் உற்பத்தி செய்யப்படும் பாக்குகளை அதிகளவில் வாங்கி வருவதால், கடந்த ஐந்து மாதங்களில், சிவப்பு பாக்கு விலை 26 முதல் 40 சதவீதமாக அதிகரித்துள்ளது.கர்நாடகத்தில், அதிகளவில் பாக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இம்மாநிலத்தில் மந்தமாக காணப்பட்ட பாக்கு விற்பனை, தற்போது வடஇந்தியாவைச் சேர்ந்த வர்த்தகர்கள் அதிகளவில் கொள்முதல் செய்வதால், விலை அதிகரித்துள்ளது.கடந்த 2010ம் ஆண்டு, டிசம்பர் மாதம், 6,000 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு குவிண்டால் வெள்ளை பாக்கு (சாலி) விலை தற்போது 14 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. நடப்பாண்டில், சென்ற பிப்ரவரி மாதம், 11,500 ரூபாயாக விற்கப்பட்ட ஒரு குவிண்டால் சிவப்பு பாக்கு விலை, நடப்பு ஜூன் 7ம் தேதி, 14 ஆயிரத்து 500 ரூபாயாக காணப்பட்டது.கர்நாடகத்தின் மத்தியில் உள்ள தேவனகிரிக்கு தினமும் 5,000 குவிண்டால் பாக்கு வரத்து உள்ளது. இங்கு சிவப்பு பாக்கிற்கும், மங்களூரில் வெள்ளை பாக்கிற்கும் அதிகளவில் கிராக்கி காணப்படுகிறது. பிளாஸ்டிக் பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டகுட்காவுக்கு தடை விதிக்கப்பட்டதால், குட்கா விரும்பிகள் பலரும், பாக்கு சுவைக்கும் பழக்கத்திற்கு மாறியுள்ளனர். இதனால், வெள்ளை பாக்கிற்கு கிராக்கி ஏற்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது. கர்நாடகத்தில், எதிர்பார்க்கப்பட்ட 5 லட்சம் டன் பாக்கு உற்பத்தியில் வெள்ளை பாக்கு உற்பத்தி 30 சதவீதம் என்ற அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தானிய சேமிப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 10,2011,00:28 IST

கடலூர் : மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் சென்னை மண்டலம் சார்பில் தானிய சேமிப்பு குறித்து இரண்டு நாள் பயிற்சி முகாம் கடலூரில் நடந்தது. கடலூர் கரும்பு ஆராய்ச்சி

பண்ணையில் நடந்த முகாமை கரும்பு ஆராய்ச்சி பண்ணை முதல்வர் டாக்டர் நஜீர் அகமது துவக்கி வைத்து பேசினார். பயிர்களை பூச்சிகளிடம் இருந்து காப்பது. வயல்களில் எலிகளை கட்டுப்படுத்துவது. தானியங்களை பதப்படுத்துவது. மேலும், தானியங்களை சேமிப்பு கிடங்கில் இருப்பு வைத்து அந்த ரசீதைக் கொண்டு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் 60 சதவீத கடன் பெறும் திட்டம் குறித்து மத்திய சேமிப்பு கிடங்கு முதுநிலை தொழில்நுட்ப மேலாளர் மரியதாஸ், சேமிப்பு ஆய்வு அதிகாரி திருமூலன், கரும்பு ஆராய்ச்சி பண்ணை பூச்சியியல் துறை இணை பேராசிரியர் துரைசாமி, பேராசிரியர் ஜெயச்சந்திரன் உள்ளிட்டோர் ஆலோசனை வழங்கினர். முகாமில் கடலூர், சிதம்பரம் பகுதி விவசாயிகள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் மத்திய சேமிப்பு கிடங்கு பொதுமேலாளர் ஜவகர் பங்கேற்று, முகாமில் பங்கேற்ற விவசாயிகளுக்கு சான்றிதழ் மற்றும் 1,200 ரூபாய் மதிப்புள்ள அலுமினிய தானிய குதிர் வழங்கப்பட்டது.

**விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் இன்று நடக்கிறது**

பதிவு செய்த நாள் : ஜூன் 10,2011,01:40 IST

கடலூர் : கடலூரில் விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் இன்று நடக்கிறது. இது குறித்து வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோவன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: விவசாயிகள் குறை கேட்புக் கூட்டம் இன்று (10ம்) தேதி காலை 10.30 மணிக்கு வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் நடக்கிறது. கூட்டத்தில் தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் வணிக விதை சான்று, மின்சார வாரியம், கால்நடை பராமரிப்பு, பொதுப்பணி துறை நீர் பாசனம் துறையை சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்க உள்ளனர். விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளை தெரிவிக்கலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**வேளாண்மை துறை சார்பில் காரீப் முன்பருவ முனைப்பு முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 10,2011,00:27 IST

சிதம்பரம் : சிதம்பரம் அருகே ஆயிப்பேட்டை கிராமத்தில் காரீப் முன்பருவ முனைப்பு முகாம் மற்றும் இடுபொருட்கள் வழங்கும் விழா நடந்தது. கீரப்பாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் விஜயகுமார் தலைமை தாங்கினார். வேளாண்மை அலுவலர் ரமேஷ், துணை வேளாண்மை அலுவலர் குப்புசாமி ஆகியோர் காரீப் பருவத்தில் நடவு செய்யவுள்ள குறுவை நடவு மற்றும் நடவுக்கு பிந்திய தொழில் நுட்பம், திருந்திய நெல் சாகுபடி முறைகள், எலி ஒழிப்பு முறைகள், பசுந்தாள் இடுவதின் முக்கியம் ஆகியன குறித்து விவசாயிகளுக்கு விளக்கம்

அளித்தனர். விவசாயிகளுக்கு ஜிப்சம், சிங்சல்பேட், நுண்ணுயிர் பொட்டலம் மானிய விலையில் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் செல்வராஜ் செய்திருந்தார்.

**அதிக மகசூல் தரும் தென்னங்கன்று விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜூன் 10,2011,01:21 IST

சேலம்: ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் அமைந்துள்ள வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில், உயர்ரக மற்றும் அதிக மகசூல் தரக்கூடிய இளம் தென்னங்கன்றுகள் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலையின் வேளாண் ஆராய்ச்சி நிலைய தலைவர் முகமது யாசின் வெளியிட்டுள்ள அறிக்கை: ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் அமைந்துள்ள வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில், உயர்ரக மற்றும் அதிக மகசூல் தரக்கூடிய இளம் தென்னங்கன்றுகள்(நெட்டை ரகம், வெஸ்ட்கோஸ்ட் டால்) விற்பனைக்கு உள்ளன. ஒரு கன்றின் விலை 30 ரூபாய் மட்டுமே. தேவைப்படுவோர் "பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலை, பவானிசாகர்' என்ற முகவரியிலோ, 04295- 240244 என்ற தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**பயறு சாகுபடியில் கூடுதல் மகசூல் பெற அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 10,2011,01:34 IST

சேந்தமங்கலம்: "பாசிப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் கூடுதல் மகசூல் பெற, ஒரு ஏக்கருக்கு ஐந்து கிலோ டி.ஏ.பி., தெளிக்க வேண்டும்' என, சேந்தமங்கலம் வேளாண் இயக்குனர் வருதராஜ் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: சேந்தமங்கலம் வட்டாரத்தில் பயறு வகைகள் மற்றும் உளுந்து பயிர்கள் இன்னும் சில தினங்களல் பூக்கும் தருவாயில் உள்ளது. பாசிப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் கூடுதல் மகசூல் பெற, ஒரு ஏக்கருக்கு ஐந்து கிலோ டி.ஏ.பி.,யை முதல் நாள் இரவே பிளாஸ்டிக் பக்கெட்டில் வைக்க வேண்டும். மறுநாள், தெளிந்த உரக்கரைசலை, 250 லிட்டர் நீரில் கலந்து காலை அல்லது மாலை வேளையில், வயலில் போதிய ஈரம் இருக்கும் போது கைத்தெளிப்பான் கொண்டு பூக்கும் தருவாயில் தெளிக்க வேண்டும். பதினைந்து நாள் இடைவெளிக்கு பின், மறுமுறையும் செடி நன்கு நனையும் வரை விட வேண்டும். மேலும்,

பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை மீண்டும் உரம் தெளிக்க வேண்டும். அதன்மூலம் நல்ல மகசூல் பெற முடியும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நிலக்கடலை சாகுபடியில் உயர் தொழில் நுட்பம் :விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 10,2011,00:05 IST

ஓசூர்: ஓசூர் தாலுகாவில் சாதாரண முறையில் நிலக்கடலை சாகுபடி செய்வதால் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. ஓசூர் தாலுகாவில், 1,500 ஹெக்டேரில் ஆண்டுதோறும் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதியில் நிலவும் சீதோஷ்ண நிலையும், மண்வளமும் நிலக்கடலை சாகுபடிக்கு சாதகமாக உள்ளன. ஆனால், விவசாயிகள் நிலக்கடலை சாகுபடியில் உயிர் தொழில்நுட்பங்களை பயன்படுத்தாததால், மகசூல் இழப்பு ஏற்படுகிறது. தற்போது நிலக்கடலை சாகுபடியில் உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளை வேளாண் துறை அறிமுகம் செய்துள்ளது. இந்த சாகுபடி முறைகளை பின்பற்றினால் அதிக மகசூலும், அதிக வருமானமும் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் நாகராஜ் கூறியதாவது: நிலக்கடலை பயிர் சாகுபடிக்கு மணல் பாங்கான வண்டல், செம்மண் மற்றும் வண்டல் நிலங்கள் ஏற்றது. சட்டிக்கலப்பையை பயன்படுத்தி மூன்று அல்லது நான்கு இரும்பு கலப்பை அல்லது நாட்டு கலப்பையை கொண்டு மண் புழுதியாகும் வரை உழ வேண்டும். பொதுவாக டி.எம்.வி., 2, டி.எம்.வி., 7, ஜே.எல்., 24 ஆகிய ரகங்களை சேர்ந்த நிலக்கடலை விதைகளை சாகுபடி செய்யலாம். நன்கு மக்கிய தொழு உரம் மற்றும் தென்னை நார் கழிவினை ஏக்கருக்கு 5 டன் என்ற அளவில் கடைசி உழவுக்கு முன் இட வேண்டும். மானாவாரி பயிருக்கு 9 கிலோ யூரியா, 25 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 30 கிலோ பொட்டாஷ் உரத்தினை ஊட்டமேற்றிய தொழு உரமாக இட வேண்டும்.

விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த, ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் புளூரசன்ஸ் நுண்ணியிரையை கலக்க வேண்டும் விதைக்கும்போது ஏக்கருக்கு தேவையான விதையுடன் இரு பாக்கெட் ரைசோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா இரு பாக்கெட் உரங்களை ஆரிய அரிசி கஞ்சியில் கலந்து விதைக்க வேண்டும். இதனால், நிலக்கடலை பயிரின் வேர் முடிச்சு காற்றில் உள்ள தழைச்சத்தை பயிருக்கு கிடைக்க செய்கிறது. ஏக்கருக்கு, 5 கிலோ நூண்ணூட்ட சத்து கலவையை 20 கிலோ மணலுடன் கலந்து விதைத்தவுடன் நிலத்தின் மேல் சீராக தூவ வேண்டும். விதைத்த 45ம் நாள் ஏக்கருக்கு, 80 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். ஜிப்சத்தில் உள்ள சுண்ணாம்பு சத்து 24 சதவீதம்

மற்றும் கந்தக சத்து 18.8 சதவீதம் நிலக்கடையில் திரட்சியான காய்கள் உருவாகி மகசூல் அதிகரிக்க செய்கிறது. நிலக்கடை சாகுபடி செய்த வயலை சுற்றி ஆமணக்கு பயிரிட்டு புரோடீனியா தாய் பூச்சியின் முட்டைகளையும், இளம் புழுக்களையும் அழிக்கலாம். 10;1 என்ற விகிதத்தில் நிலக்கடலையில் தட்டைப்பயறு ஊடுபயிராக சாகுபடி செய்ய வேண்டும்.

நிலக்கடை செடிகளில் இலைகள் முதிர்ந்து காய்ந்த நிøயில் மேல்மட்ட இலைகள் மஞ்சள் நிறமாக காணப்படும்போது அறுவடை செய்ய வேண்டும். இந்த தொழில்நுட்பம் மூலம் நிலக்கடலை சாகுபடி செய்தால் ஏக்கருக்கு, 600 கிலோ வரை உலர்ந்த காய்கள் கிடைக்கும் வாய்ப்புள்ளது. இதன் மதிப்பு இன்றைய விலையில் 25,000 ரூபாய். நிலக்கடலைக்கு தேவையான உயிர் உரங்கள், ஜிப்சம் ஆகியவை 50 சதவீதம் மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**"வேளாண் உற்பத்தி பொருள் ஏற்றுமதிக்கு நல்ல எதிர்காலம்'**

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2011,22:52 IST

கோவை : ""வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான அணுகுமுறைகளை மத்திய அரசு முழுமையாக மாற்றிக் கொள்ள வேண்டும். வேளாண் உற்பத்திப் பொருள் ஏற்றுமதிக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது,'' என்று, வெளிநாட்டு வர்த்தகத்துறையின் இணைப் பொது இயக்குனர் சசிக்குமார் பேசினார். கோவை, வேளாண் பல்கலை வர்த்தகம் மற்றும் அறிவுசார் சொத்துரிமைத் துறை சார்பில், வேளாண் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வது தொடர்பான இரண்டு நாள் பயிலரங்கு நேற்று துவங்கியது. இந்திய ஏற்றுமதியாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் தென்மண்டல தலைவர் வால்டர் டிசோசா தலைமை வகித்தார். பயிலரங்கை பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி துவக்கி வைத்தார்.

வெளிநாட்டு வர்த்தகத்துறையின் இணை பொது இயக்குனர் சசிக்குமார் பேசியதாவது: உணவு உற்பத்தியைப் பொருத்த வரை உணவுப் பொருட்கள் கிடைத்தல்; உணவுப்பாதுகாப்பு; முழு ஊட்டச்சத்து கிடைத்தல் என மூன்று நிலைகள் உள்ளன. நாம் உணவுப்பாதுகாப்பு என்ற நிலையை எட்டியுள்ளோம். உணவுத்தட்டுப்பாடு வர வாய்ப்பு இருக்கிறது. ஏனெனில், நம்மிடம் போதிய ஆராய்ச்சிகள் இல்லை. இந்தியாவில் அதீத மனிதவளம் இருக்கிறது என்பதை நமது பலமாகக் கூறிக்கொண்டிருக்கிறோம்; உண்மையில் என்ன ஆராய்ச்சி செய்திருக்கிறோம்; கண்டுபிடித்து இருக்கிறோம்; எதுவுமில்லை என்பதே நிதர்சனம்.

பெரும்பாலும் மேற்கத்திய ஆராய்ச்சி, தொழில்நுட்பங்களையே பின்பற்றுகிறோம். நமக்கு என்று பிரத்யேக தொழில்நுட்பங்களை பின்பற்றுவதில்லை. மேற்கத்திய நாடுகளின் மக்கள்தொகை, வாழ்க்கை முறைகள் வேறு. அவர்களுக்கு ஏற்ற தொழில்நுட்பம் நமக்கும் ஒத்துவராது. உதாரணமாக ஒரு குடிநீர்க்குழாய் அவர்கள் நாட்டில் 100 முறை திருப்புவதற்கு ஏற்ற வகையில் தொழில்நுட்பத்துடன் செய்யப்பட்டிருக்கும். இந்தியாவில் மக்கள்தொகை அதிகம். நாம் அதை விட ஆயிரம் மடங்கு திருப்புவோம். இது எவ்வகையில் ஒத்துப்போகும். எனவே, நமக்கென பிரத்யேக தொழில் நுட்பங்களை கண்டறிய வேண்டும். வேளாண் மருத்துவம், இயற்பியல், வேதியியல் துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அரசு தனது அணுகுமுறையை முற்றிலுமாக மாற்றிக் கொள்ள வேண்டும். உலகமயமாக்கலால் வாய்ப்புகள் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அதே அளவு சவால்களும் இருக்கிறது. வேளாண் உற்பத்திப்பொருட்களுக்கான தேவை எதிர்காலத்தில் அதிகரிக்கும் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. மரபுசாரா எரிசக்தி, உயிரி எரிசக்தி போன்றவற்றுக்கு வேளாண் உற்பத்தியை நம்ப வேண்டி இருக்கும்.

வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில், வாய்ப்புகளைக் கண்டறிய வேண்டும். 98.5 சதவீத வர்த்தகம் பணப் பரிவர்த்தனை மூலமும் எஞ்சிய 1.5 சதவீதம் பண்டமாற்று உள்ளிட்ட இதர முறைகளிலும் நடக்கிறது. எனவே, ஏற்றுமதியில் ஈடுபடுபவர்கள் ரூபாய் மதிப்புகளில் கவனம் செலுத்த வேண்டும். மக்கள்தொகைதான் நமது பெரும்பிரச்னையாக இருந்தது; ஆனால், அதுவே நமது மிகப்பெரும் பலமாகவும் ஆகி விட்டிருக்கிறது. "பிரிக்' (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா) நாடுகள் தான் அதிக உற்பத்தி மற்றும் நுகர்வுக்கான நாடுகளாக இருக்கும். எனவே இது நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு. பன்னாட்டு நிறுவனங்கள் இங்கு தொழிற்சாலைகளைத் துவக்கும்போது, தற்போது இருக்கும் சில நடைமுறைகளை கடுமையாக்க வேண்டும். சீனா சில புத்திசாலித்தனமான முடிவுகளை எடுத்து தன்னை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறது. வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பாக இந்திய அரசு தனது அணுகுமுறைகளை முழுமையாக மாற்றிக் கொள்ள வேண்டும். வேளாண் உற்பத்திப் பொருள் ஏற்றுமதிக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. இவ்வாறு, சசிக்குமார் பேசினார்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக ஏற்றுமதி தொழில்நுட்பம் குறித்த கையேட்டை பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி வெளியிட்டு, வர்த்தகம் மற்றும் அறிவுசார் சொத்துரிமைத்துறை தொடர்பான இணையதளத்தை துவக்கி வைத்தார். வர்த்தகம் மற்றும் அறிவுசார் சொத்துரிமைத்துறைத்தலைவர் செல்வராஜ், வேளாண் பொருளியல் துறை தலைவர் சின்னதுரை உட்பட பலர் பங்கேற்றனர்.

**காய்கறி பயிரிட்டால் கை நிறைய லாபம் : குடை மிளகாய் விவசாயிகளுக்கு கூடுதல் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2011,23:12 IST

ஊட்டி : உயர் வகை உணவு வகைகள் தயாரிக்க பயன்படும் செலரி, ரெட் கேபேஜ், வெள்ளரி, புருக்கோலி, கேப்சிகம், புஷ்பீன்ஸ் வகைகளுக்கு நல்ல விலை கிடைத்து வருவதால், இதன் உற்பத்தியில் சிறு விவசாயிகள் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் தேயிலை முக்கிய விவசாய விளைபொருளாக உள்ளது. இதற்கு அடுத்தபடியாக உருளைகிழங்கு, காரட், முட்டைகோஸ், பீட்ரூட் ஆகியவை பயிர் செய்யப்படுகின்றன. கடந்த சில ஆண்டாக, பசுந்தேயிலைக்கு தகுந்த விலை கிடைக்காததால், விவசாயிகள் பிற பயிர் சாகுபடியில் ஆர்வம் காட்டினர். இதில், நட்சத்திர ஓட்டல்களில் பயன்படுத்தப்படும் காய்கறிகளை முன்னோடி விவசாயிகள் பலர் பயிர் செய்து வருகின்றனர். புருக்கோலி, கேப்சிகம், புஷ்பீன்ஸ், சூப் தயாரிக்க பயன்படும் செலரி, ரெட் கேபேஜ், வெள்ளரி உட்பட பல்வேறு காய்கறிகள் இதில் அடங்கும்.

இத்தகைய காய்கறிகளை ஊட்டி, கோவை, பெங்களூரு, சென்னையில் உள்ள உயர் தர ஓட்டல்களுக்கு வினியோகம் செய்வது போக, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றனர். தற்போது, நீலகிரியில் நிலவும் காலநிலையில் "கேப்சிகம்' எனப்படும் "மெகா சைஸ்' குடை மிளகாய் அதிகம் விளைகிறது. இது, கிலோ ஒன்றுக்கு 15 முதல் 20 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. புஷ் பீன்ஸ் 40-42 ரூபாய், ரெட் கேபேஜ் 6 முதல் 8 ரூபாய் வரையிலான விலைக்கு விற்பதால், இவற்றின் உற்பத்தியில் ஆர்வம் காட்டுகின்றனர். சிறு விவசாயி மூர்த்தி கூறுகையில்,""மலை காய்கறிகள் விளைவிக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், ஊடுபயிராக புஷ்பீன்ஸ், கேப்சிகம், செலரி உட்பட பிற காய்கறிகளையும் பயிரிட்டு வருகிறோம். ஆண்டு முழுவதும் இதன் விளைச்சல் உள்ளது. தற்போது பல இடங்களில் இத்தகைய காய்கறிகளின் அறுவடை காலமாக உள்ளது. குறைந்த அளவு உற்பத்தி செய்தாலும், நஷ்டமில்லாத விலை கிடைத்து வருகிறது," என்றார்.

**துவங்கியது பருவ மழை விதைப்பு பணி மும்முரம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2011,22:26 IST

திண்டுக்கல் : தென்மேற்கு பருவமழை சரியான நேரத்தில் துவங்கியுள்ளதால், முன் விதைப்பு பணிகளில் விவசாயிகள் மும்முரம் காட்டி வருகின்றனர். இந்த ஆண்டு பருவமழை முன்னதாகவே துவங்கும் என, அறிவிக்கப்பட்டது. சென்ற வாரம் மாவட்டத்தில் பல இடங்களில் பரவலாக மழை

பெய்தது. இம்மழை விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது.
கோடை உழவு முடித்து விட்டு முன்விதைப்பு பணிகளுக்காக காத்திருந்த விவசாயிகளுக்கு, மழை ஏற்ற தருணத்தில் பெய்து கைகொடுத்துள்ளது. விதை ப்புக்கு முன், நிலத்தை சீர்படுத்தும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். நிலங்களை தயார்படுத்தும் பணிகள் முடிந்துவிட்டால் ஜூலையில் விதைப்பு பணியை தொடங்க முடியும். இம்மாத இறுதியில் பருவமழை முழுமையாக தொடங்கிவிடும். இதன் மூலம் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யவும், சென்ற ஆண்டடைவிட கூடுதலாக மகசூல் எடுக்கவும் முடியும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர். மின்தடைக்கு தீர்வு காணப்படும் பட்சத்தில், இந்த ஆண்டு அதிக மகசூலை ஈட்ட முடியும் என்கின்றனர் விவசாயிகள்.

**மழையால் வரத்து குறைவு உயர பறக்கிறது வெங்காயம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2011,22:26 IST

திண்டுக்கல் : மைசூரு, உடுமலைப்பேட்டையில் மழையால், திண்டுக்கல் வெங்காய சந்தைக்கு வரத்து குறைந்துள்ளது. தற்போது விலை உயர்ந்த நிலையில், ஒரு வாரத்தில் சரியும் என, வியாபாரிகள் எதிர்பார்க்கின்றனர். திண்டுக்கல் சந்தை திங்கள், புதன், வெள்ளியில் செயல்படும். இங்கு உடுமலை, ஈரோடு, திருப்பூர், சேலம், திருச்சி, ஆண்டிபட்டி, மைசூருவில் இருந்து சின்ன, பெரிய வெங்காயம் விற்பனைக்கு வருகிறது; இங்கிருந்து இலங்கை, சிங்கப்பூர், மலேசியாவுக்கு ஏற்றுமதியாகிறது. தற்போது, தமிழகத்தில் அறுவடை குறைந்துள்ளது. உடுமலை, மைசூரு பகுதியில் கன மழை பெய்வதால், அறுவடை நிறுத்தப்பட்டு, திண்டுக்கலுக்கு வரத்து குறைந்துள்ளது. ஒரு கிலோ சின்ன வெங்காயம் 34; பெரிய வெங்காயம் 14 ரூபாய்க்கு விற்கிறது; கடந்த வாரம், சின்ன வெங்காயம் 24; பெரிய வெங்காயம் 10 ரூபாய்க்கு விற்றது. விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சரியும்: உடுமலை, ஆண்டிபட்டி, திருப்பூர், மைசூருவில் அடுத்த வாரம் அறுவடை அதிகரிக்கும். இதனால், விலை மீண்டும் சரியும் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

**திராட்சை உற்பத்தி குறைவு கம்பம் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2011,23:20 IST

கம்பம் : கம்பம் பள்ளத்தாக்கில் திராட்சை உற்பத்தியில் குறைவு ஏற்படும் என விவசாயிகள் கவலை கொண்டுள்ளனர்.
கம்பம் பள்ளத்தாக்கில் நூற்றுக்கணக்கான கிராமங்களில் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது.

தற்போது திராட்சை விலை குறைந்துள்ளது. கிலோவிற்கு ரூ. 15 மட்டுமே கிடைக்கிறது. அதேசமயம் உற்பத்தி குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. காமயகவுண்டன்பட்டி திராட்சை விவசாயிகள் சங்க பொருளாளர் இருளாண்டி கூறுகையில், "விலை தற்போது குறைந்துள்ளது. இன்னும் இரண்டு வாரங்களில் நல்ல விலை கிடைக்கும். ஆனால் அப்போது உற்பத்தி கடுமையாக குறையும். ஏக்கருக்கு 2 டன் மட்டுமே கிடைக்கும். மகசூல் குறைவால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்' என்றார். தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் செந்தில்குமார் கூறுகையில்,"திராட்சை சாகுபடியில் ஆண்டிற்கு 2 முறை மட்டுமே அறுவடை செய்ய வேண்டும் என்று விவசாயிகளிடம் கூறியுள்ளோம். ஆனால் ஆண்டிற்கு 3 முறை அறுவடை செய்கின்றனர். எனவே திராட்சை கொடியில் மகசூல் தருவதற்குரிய திறன் குறைகிறது,'என்றார்.

## சாய ஆலை மாசுபடுதலை தவிர்க்க வண்ணப் பருத்தி ரகம் வெளியிட ஆராய்ச்சி வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் தகவல்

*கோவை, ஜூன்.10–*

*சாய ஆலை மாசுபடுதலை தவிர்க்க வண்ணப்பருத்திரகம் வெளியிட ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும் என்று வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கூறினார்.*

*ஆய்வுக் கூட்டம்*

*கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழகத்தில் பருத்தி மற்றும் பட்டுப்புழு வளர்ச்சி குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதன் தொடக்கவிழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கலையரங்க கூடத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை தாங்கி ஆய்வுக் கூட்டத்தை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–*

*பருத்தி உற்பத்தி*

*இந்தியாவில் பருத்தியானது 10.7 மில்லியன் எக்டேர் பரப்பளவில் பயிர் செய்யப்படுகிறது. உலக உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்த படியாக இந்தியா உள்ளது. இந்த உற்பத்தியானது உலக உற்பத்தியில் 22 சதவீதமாகும். தமிழகத்தில் பருத்தி உற்பத்தி திறன் எக்டேருக்கு 713 கிலோ என்ற அளவில் உள்ளது. இதே போல் 90 சதவீத அளவுக்கு பி.டி.ரக பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறது.*

இதன் காரணமாக பருத்தி ஏற்றுமதியானது 5 மில்லியன் பேல்களாக அதிகரித்து உள்ளது. இந்தியாவில் நமது மாநிலத்தில் தான் அதிக அளவில் நூற்பாலைகள் உள்ளன. இதில் 902 ஸ்பின்னிங் ஆலைகளும், 23 காம்போசைட் ஆலைகள் மற்றும் 976 ஸ்பின்னிங் யூனிட்கள் உள்ளன. இவற்றில் கோவை மாவட்டத்தில் 310 ஸ்பின்னிங் ஆலைகளும், 13 காம்போசைட் ஆலைகளும், 563 ஸ்பின்னிங் யூனிட்களும் இயங்கி வருகின்றன. இதன் மூலம் சுமார் 2,56,000 தொழிலாளர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

வண்ணப்பருத்தி ஆராய்ச்சி

தற்போது சாய ஆலைகள் மூலம் ஏற்படும் மாசுபாட்டால் பல்வேறு பிரச்சினைகள் எற்படுகின்றன. இதற்கு தீர்வாக வண்ணப் பருத்தியை பயன்படுத்தலாம். இந்த பருத்தியில் சிறந்த ரகங்களை வெளியிட வேளாண் பல்கலைக்கழகம் ஆராய்ச்சியில் ஈடுபடும். இயற்கை (அங்கக) பருத்தியின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் இருந்தாலும், இதன் மகசூலானது எக்டேருக்கு 4 முதல் 5 குவிண்டால் என்ற அளவில் உள்ளது. அதனால் விவசாயிகள் மகசூலுக்கு ஏற்ற லாபம் கிடைத்தால் மட்டுமே இதை தொடர்ந்து பயிரிடுவார்கள்.

பருத்தி பயிர் செய்ய அதிக வேலை ஆட்கள் தேவைப்படுவதால் நிலத்தை பண்படுத்த, விதைக்க, களைஎடுக்க, பூச்சி மருந்து தெளிக்க மற்றும் அறுவடை செய்ய நவீன எந்திரங்களை வேளாண் பொறியாளர்கள் கண்டுபிடிக்க வேண்டும். இதன் மூலம் பருத்தி உற்பத்திக்கு ஆகும் செலவை குறைக்க முடியும்.

பட்டுவளர்ப்பு தொழில்

இதே போல் பப்பாளி மாவூப்பூச்சியின் தாக்குதலால் பட்டுவளர்ப்பு மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது. இந்த பிரச்சினையை தவிர்க்கும் பொருட்டு வேளாண் பல்கலைக்கழகம் ஒட்டுண்ணிகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தது. இவற்றை அதிக அளவில் உற்பத்தி செய்து விவசாயிகளின் வயல்வெளியில் விட்டதன் வாயிலாக ரூ.50 கோடி மதிப்புள்ள பூச்சி மருந்து பயன்பாடு குறைக்கப்பட்டது. இதே போல் ரூ.500 கோடி மதிப்புள்ள மகசூல் இழப்பு தவிர்க்கப்பட்டது. பட்டு வளர்ப்பில் தொழில் நுட்ப தேவையை பூர்த்தி செய்ய நடப்பு ஆண்டில் முதன் முறையாக வேளாண் பல்கலைக்கழகத்தில் பட்டுவளர்ப்பு படிப்பு அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## *கடந்த 8 வாரங்களில் இல்லாத அளவிற்கு உணவு பொருள் பணவீக்கம் 9.01 சதவீதமாக உயர்ந்தது*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*மே 28–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் உணவு பொருள் பணவீக்கம் கடந்த 8 வாரங்களில் இல்லாத அளவிற்கு 9.01 சதவீதமாக அதிகரித்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 8.06 சதவீதமாக இருந்தது.*

*பாரத ரிசர்வ் வங்கி*

*உணவு பொருள் பணவீக்கம் மார்ச் 26–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 9.18 சதவீதமாக உயர்ந்து இருந்தது. அதன் பிறகு தற்போது தான் இந்த அளவிற்கு உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*பொருளாதார வளர்ச்சி வேகம் குறைந்து வரும் நிலையில், உணவு பணவீக்கத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு, ஒரு சவாலாக அமைந்துள்ளது. எனவே இம்மாதம் 16–ந் தேதி வெளிவர உள்ள பாரத ரிசர்வ் வங்கியின் இடைநிலை கடன் கொள்கை ஆய்வு அறிக்கையில் பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை மேலும் உயர வாய்ப்புள்ளது என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். நடப்பு ஆண்டின் ஜனவரி–மார்ச் மாத காலத்தில், கடந்த ஐந்து காலாண்டுகளில் இல்லாத அளவிற்கு பொருளாதார வளர்ச்சி 7.8 சதவீதமாக குறைந்துள்ளது. எனவே வட்டி விகிதங்களை உயர்த்தினால், வளர்ச்சி வேகம் மேலும்*

குறையும் என்ற அச்சப்பாடு நிலவி வருகிறது.

பழங்கள்

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில் ஓராண்டு கால அடிப்படையில் பழங்கள் மற்றும் வெங்காயம் விலை முறையே 30.78 சதவீதம் மற்றும் 14 சதவீதம் அதிகரித்துள்ளது.

பால் விலை 8.49 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், முட்டை, இறைச்சி, மீன் உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 6.99 சதவீதம் அதிகரித்துள்ளது. தானியங்கள் விலை 5.77 சதவீதம் உயர்ந்துள்ளது.

அதேசமயம் பருப்பு வகைகள் விலை 9.49 சதவீதம் குறைந்துள்ளது. காய்கறிகள் மற்றும் உருளைக்கிழங்கு விலை முறையே 0.20 சதவீதம் மற்றும் 2.87 சதவீதம் குறைந்துள்ளது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில் அத்தியாவசிய பொருள்கள் பணவீக்கம் 10.87 சதவீதத்திலிருந்து 11.52 சதவீதமாக உயர்ந்துள்ளது.

உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் உயர்ந்து வருவதும் மத்திய அரசுக்கு ஒரு சவாலாக உள்ளது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில் இந்த பணவீக்கம் 21.31 சதவீதத்திலிருந்து 20.97 சதவீதமாக குறைந்துள்ளது. சென்ற ஓர் ஆண்டு காலத்தில் பெட்ரோல் விலை 33.23 சதவீதம் அதிகரித்துள்ளது. இதனையடுத்து எரிபொருள் பணவீக்கம் 12.46 சதவீதமாக உயர்ந்துள்ளது.

தென்மேற்கு பருவமழை நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் நடப்பு கரீஃப் பருவத்தில் (ஜூன்–அக்டோபர்) உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரிக்கும் நிலையில் பணவீக்கம் குறைய வாய்ப்புள்ளது என்று பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

## நடப்பு ஆண்டு க ப் பருவத்தில் நெல் சாகுபடி பரப்பளவு 15 சதவீதம் அதிகரிக்கும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

கொல்கத்தா

இந்தியாவில், நடப்பு ஆண்டு கரீஃப் பருவத்தில் (ஜூன்–அக்டோபர்), நெல் பயிரிடும் பரப்பளவு 10 முதல் 15 சதவீதம் வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நெல் உற்பத்தி

சென்ற ஆண்டின் இதே பருவத்தில் நெல் உற்பத்தி 8.03 கோடி டன்னாக இருந்தது. 2010–11 முழு பருவத்தில் (ஜூலை–ஜூன்) நாட்டின் மொத்த நெல் உற்பத்தி 9.41 கோடி டன்னாக இருக்கும் என மத்திய வேளாண் அமைச்சகத்தின் மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் நெல் உற்பத்தியில் கரீஃப் பருவத்தின் பங்களிப்பே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் பல பகுதிகளில் சாகுபடி பணிகள் தொடங்கியுள்ளன. பயிரிடும் பரப்பளவு அதிகரிக்க வாய்ப்புள்ளதால் நடப்பு 2011–12 வேளாண் பருவத்தில் நெல் விளைச்சலும் அதிகரிக்கும் என விவசாய துறை வட்டாரங்கள் தெரிவித்தன. வடமாநிலங்களில் நெல் சாகுபடி பணிகள் விறுவிறுப்புடன் நடைபெற்று வருகின்றன. எனினும் சென்ற ஆண்டு கரீஃப் பருவத்துடன் ஒப்பிடுகையில் சில முக்கிய மாநிலங்களில் நெல் பயிரிடும் பரப்பளவு குறைந்துள்ளதாக தெரிகிறது. அதே சமயம், பருத்தி சாகுபடி பரப்பளவு அதிகரித்து வருகிறது. பருத்திக்கு நல்ல விலை கிடைப்பதால் நெல் விவசாயிகள் பலர் பருத்தியின் மீது கவனம் செலுத்தி வருவதே இதற்கு காரணமாகும்.

கடந்த 140 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பருத்தி விலை உயர்ந்துள்ளதாக தெரிகிறது. இதனால் பருத்தி உற்பத்தியில் முன்னிலையில் உள்ள குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் சாகுபடி பரப்பளவு கணிசமாக உயரும் என்று கூறப்படுகிறது. பஞ்சாப் மாநிலத்தில் பருத்தி பரப்பளவு 87,000 ஹெக்டேர் அதிகரித்து 5.70 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. அரியானா மாநிலத்தில் இது 20 சதவீதம் உயர்ந்து 6 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளதாக முதல் கட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

மகாராஷ்டிரா

பஞ்சாப், அரியானா மாநிலங்களில் பல்வேறு பயிர்களுக்கான விதைப்பு பணிகள் 90 சதவீதம் நிறைவடைந்து விட்டன. மகாராஷ்டிராவில் இனிமேல்தான் சாகுபடி தொடங்க உள்ளது. அங்கு பருத்தி சாகுபடி நிலப்பரப்பு 10 சதவீதம் உயர்ந்து 43.50 லட்சம் ஹெக்டேராக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் அம்மாநிலத்தில்

மட்டும் சுமார் 96 லட்சம் பொதிகள் பருத்தி உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நெல், பருத்தியுடன் நிலக்கடலை, ஆமணக்கு உள்ளிட்ட எண்ணெய் வித்துக்கள் மற்றும் கம்பு, மக்காச்சோளம் ஆகிய பயிர்களுக்கான சாகுபடியும் பல்வேறு மாநிலங்களின் விறுவிறுப்புடன் நடைபெற்று வருகிறது. நம் நாட்டில் பெரும்பாலும் விவசாயத்துக்காக மழையை நம்பியிருக்கும் பகுதிகளில்தான் மக்காச்சோளம் பயிர் செய்யப்படுகிறது. எனவே விவசாயிகள் நல்ல மழையை எதிர்நோக்கி காத்திருப்பதாக மக்காச்சோளம் அபிவிருத்தி கழகத்தின் தலைவர் சயீன் தாஸ் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில்...

கடந்த சில ஆண்டுகளில் மக்காச்சோளம் சாகுபடி பரப்பளவு 10 லட்சம் ஹெக்டேர் உயர்ந்துள்ளதாக தெரிகிறது. நம் நாட்டில் சென்ற ஆண்டில் 2 கோடி டன் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. நடப்பு பருவத்தில் கர்நாடக மாநிலத்தில் 12.7 லட்சம் ஹெக்டேரில் மக்காச்சோளம் பயிர் செய்யப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆந்திராவில் 6.80 லட்சம் ஹெக்டேரிலும், தமிழ்நாட்டில் 2.50 லட்சம் ஹெக்டேரிலும் பயிரிடப்படும் என்று தெரிகிறது.

## கூடுதலாக 10 லட்சம் பருத்தி பொதி ஏற்றுமதி செய்ய அனுமதி



மாதவி சாலி ,அகமதாபாத்

மத்திய அரசு ஏற்கனவே 55 லட்சம் பருத்தி பொதிகளை ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்துள்ளது. ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தியைக் கொண்டதாகும்.

இதுவரை 52.50 லட்சம் பருத்தி பொதிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் தற்போது மேலும் பத்து லட்சம் பொதிகளை ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆக, நடப்பு பருவத்தில் மொத்தம் 65 லட்சம் பொதிகள் ஏற்றுமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பு 2010–11 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) 3.39 கோடி பொதிகள் பருத்தி உற்பத்தியாகி உள்ளதாக வேளாண் அமைச்சகத்தின் முதல்கட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இது, கடந்த 2009–10 பருவத்தில் 2.42 கோடி பொதிகளாக இருந்தது. அதே சமயம் பருத்தி ஆலோசனை வாரியம் ஏப்ரல் மாதத்தில் வெளியிட்ட மதிப்பீட்டில் நடப்பு பருவத்தில் 3.12 கோடி பொதிகள்தான் உற்பத்தியாகும் தெரிவித்தது. இது, இவ்வாரியத்தின் முந்தைய மதிப்பீடான 3.29 கோடி பொதிகளைக் காட்டிலும் குறைவானதாகும்.

எனினும் நடப்பு பருவத்தில் பருத்தி உற்பத்தி முந்தைய பருவத்தைக் காட்டிலும் அதிகரிக்க உள்ளது. வெளிநாடுகளில் பருத்திக்கு நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து கூடுதலாக 10 லட்சம் பருத்தி பொதி ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## சிறுவாணி அணையின் நீர்மட்டம் 1 ½ அடி உயர்ந்தது

கோவை,ஜூன்.10–

கோவைக்கு குடிநீர் ஆதாரமாக விளங்கும் சிறுவாணி அணையில் கடந்த வாரம் பலத்த மழை பெய்தது. இதனால் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் அதிகபட்சமாக 1 ½ மீட்டர் உயர்ந்தது. ஆனால் கடந்த சில நாட்களாக சிறுவாணியில் மழை பெய்வது குறைந்தது. அணையின் நீர் பிடிப்பு பகுதியில் 10 மி.மீட்டரும், அடிவாரத்தில் 5 மி.மீட்டரும் மழை பெய்தது. இதனால் அணையின் நீர்மட்டம் 867.40 மீட்டர் ஆக இருந்தது.

சிறுவாணி அணையில் 30 மி.மீட்டர் மழை பெய்தது. அடிவாரத்தில் மழை பெய்யவில்லை. இதன் காரணமாக அணையின் நீர் மட்டம் 1 ½ அடி அதிகரித்து 867.90 மீட்டராக உயர்ந்தது.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,690-2,740

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை 4,150-4,250

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 8,900-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரி உள்பட) 1,500-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரி உள்பட) 1,917-00

**நல்லெண்ணெய்**

குமாருரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 8,000-00
டின் (15 கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட) 10,700.00
15கிலோ டின் (வரிஉள்பட) 1,850-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரி உள்பட) 1,170.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரி உள்பட) 1,495.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரி உள்பட) 1,115.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 575-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஜூன்.9–
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 5,400 | 58.00 |
| கபருப்பு (டாப்பே) | ரூ. 3,500 | 38.00 |
| உளுந்தம் பருப்பு | | |
| (கருப்பு (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உபருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு | | |
| (ஆவரை) | ரூ. 5000 | 52.00 |
| சுண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ. 2,000 | 22.00 |
| கபருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஜூன்.9–
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 6,468
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 9280
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 12,323
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 10,545
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 12,373
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 12,935
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 19,122

## கோவை உழவர் சந்தை

கோவை,ஜூன்.9–
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 45–00 | காலிப்பிளவர் | ரூ. | 15–20 |
| கத்தரிக்காய் | ரூ. | 15–16 | பொறியல் தட்டை | ரூ. | 18–20 |
| வெண்டைக்காய் | ரூ. | 25–00 | பச்சை மொச்சை | ரூ. | 30–00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 8–9 | தேங்காய் | ரூ. | 11–14 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 8–9 | பட்டாணி | ரூ. | 110–100 |
| புடலை | ரூ. | 12–00 | பூண்டு | ரூ. | 95–00 |
| பீர்க்கான்காய் | ரூ. | 22–00 | கறிவேப்பிலை | ரூ. | 12–10 |
| சுரைக்காய் | ரூ. | 10–12 | அகத்தி | ரூ. | 16–00 |
| பாகற்காய் | ரூ. | 18–22 | வாழைக்காய் | ரூ. | 22–00 |
| கொத்தவரை | ரூ. | 15–00 | குடைமிளகாய் | ரூ. | 38–00 |
| பூசணிக்காய் | ரூ. | 12–00 | சாதா பீன்ஸ் | ரூ. | 38–40 |
| அரசாணிக்காய் | ரூ. | 6–7 | டபுள்பீன்ஸ் | ரூ. | 44–00 |
| மேரக்காய் | ரூ. | 18–20 | கறிபீன்ஸ் | ரூ. | 36–00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 14–16 | புஸ்பீன்ஸ் | ரூ. | 48–00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 26–00 | காளான் | ரூ. | 80–140 |
| சின்னவெங்காயம் | ரூ. | 28–30 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11–13 |
| பெரியவெங்காயம் | ரூ. | 13–00 | மாங்காய் | ரூ. | 10–18 |
| இஞ்சி | ரூ. | 32–00 | திராட்சை | ரூ. | 32–00 |
| முருங்கைக்காய் | ரூ. | 30–32 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 18–00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 16–24 | கொய்யா1கிலோ | ரூ. | 28–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 24–00 | மாதுளை1கிலோ | ரூ. | 50–95 |
| கருணைகிழங்கு | ரூ. | 28–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15–00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | வரமிளகாய் | ரூ. | 90–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14–00 | மாம்பழம் | ரூ. | 25–50 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14–00 | ஆப்பிள் | ரூ. | 110–130 |
| சிறுகிழங்கு | ரூ. | 30–00 | சாத்துக்குடி | ரூ. | 40–00 |
| முள்ளங்கி | ரூ. | 16–18 | நெல்லிக்காய் | ரூ. | 36–40 |
| கேரட் (கட்டி) | ரூ. | 18–20 | ஆரஞ்சு | ரூ. | 75–00 |
| பீட்ருட் (கட்டி) | ரூ. | 10–16 | வெள்ளரி | ரூ. | 10–12–26 |
| நூல்கோல் | ரூ. | 24–00 | புளி 1 கிலோ | ரூ. | 75–00 |
| கொத்தமல்லி | ரூ. | 24–25 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 32–00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 24–00 | அவரை | ரூ. | 28–30 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–12 | நிலக்கடலை | ரூ. | 35–00 |
| கலர்கோஸ் | ரூ. | 14–00 | மக்காச்சோளம் | ரூ. | 3.50–18 |
| புதினா | ரூ. | 16–00 | தர்பூசணி | ரூ. | 14–00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 25300 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 25,800 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 26,800 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 11,300 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 11000 |
| சுக்கு(புதியது) | ரூ. 14000 |
| சுக்கு(பழையது) | ரூ. 12000 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 9900 |
| கொப்பரை நாடன் | ரூ. 6725 |
| கொப்பரை ராசு | ரூ. 6625 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6875 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ. 7600 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7000 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 22400 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 22580 |
| ரப்பர் பால் | ரூ. 14100 |
| காப்பி | ரூ. 10800 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3200 |
| நேந்திரகாய் | ரூ. 1250 |
| இஞ்சி | ரூ. 900 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஜூன்.9–
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,590 | 102.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1140 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1200 | 77.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1040 | ——— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1140 | 71.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1650 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 125.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,070 | 61.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,520 | 100.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,240 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1060 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,060 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,060 | – |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.168.00 | அதிகபட்சவிலை | ரூ.250.00 |
| சராசரி விலை | ரூ.140.70 | சராசரி விலை | ரூ.227.04 |
| குறைந்தபட்சவிலை | ரூ.116.00 | குறைந்தபட்சவிலை | ரூ.201.00 |

**பட்டு நூல் ரூ.1,643**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,832.00 | 16,840.00 | 16880.00 |
| ஒரு கிராம் | 2,104.00 | 2,105.00 | 2110.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 54,970.00 | 59,300.00 | 59,000.00 |
| ஒரு கிராம் | 58.80 | 59.30 | 59.00 |

தினகரன்

**உணவு பணவீக்கம் 1 சதவீதம் உயர்ந்தது**

பதிவு செய்த நாள் 6/10/2011 2:02:26 AM



புதுடெல்லி : உணவு பணவீக்க அதிகரிப்பை கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி வட்டி விகிதத்தை உயர்த்த வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். பழங்கள், அசைவ உணவுகள், பால் மற்றும் வெங்காயம் விலை உயர்வு காரணமாக மே 28ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 9.01 சதவீதமாக அதிகரித்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 8.06 சதவீதமாக இருந்தது. மார்ச் 26க்கு பின் தற்போது மீண்டும் உணவு பணவீக்கம் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மே 28ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் பழங்கள் விலை 30.8 சதவீதம், வெங்காயம், 14 சதவீதம், பால் 8.5 சதவீதம், முட்டை, கறி, மீன் 7 சதவீதமும் அதிகரித்துள்ளன. இருப்பினும் தானியங்கள் விலை 9.5 சதவீதம், சில காய்கறிகள் 0.02 சதவீதம், உருளை 2.9 சதவீதமும் குறைந்துள்ளது. இந்நிலையில் வரும் 16ம் தேதி காலாண்டு நிதி மறு ஆய்வுக்கூட்டம் நடக்கிறது. உணவு பணவீக்கம் அதிகரித்துள்ளதால் அப்போது கடன் வட்டியை ரிசர்வ் வங்கி உயர்த்த வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## கூடுதலாக 10 லட்சம் பேல் பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி

பதிவு செய்த நாள் 6/10/2011 2:01:19 AM



புதுடெல்லி: நடப்பு பருவ காலத்தில் கூடுதலாக 10 லட்சம் பேல் பருத்தி ஏற்றுமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
நடப்பு 2010&11 பருவ காலத்தில் (அக்டோபர்&செப்டம்பர்) 55 லட்சம் பேல் பருத்தி ஏற்றுமதி செய்ய ஏற்கனவே அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில் உற்பத்தி அதிகரிப்பு காரணமாக கூடுதலாக பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்குவது குறித்து முறைசாரா அமைச்சரவை குழு கூடியது. அப்போது கூடுதலாக பருத்தி ஏற்றுமதி செய்ய முடிவு செய்யப்பட்டது.

கூடுதலாக 10 லட்சம் பேல் பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியதன் மூலம் நடப்பு பருவ காலத்தில் நாட்டின் பருத்தி ஏற்றுமதி 65 லட்சம் பேலாக அதிகரிக்கும். இதில் 52.5 லட்சம் பேல் பருத்தி ஏற்கனவே ஏற்றுமதியாகிவிட்டது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. விவசாயிகள் லாபம் அடையும் வகையில் கூடுதலாக 15 லட்சம் பேல் பருத்தி ஏற்றுமதிக்கு அனுமதியளிக்க கோரப்பட்டது. மேலும் நடப்பு பருவ காலத்தில் நாட்டின் பருத்தி உற்பத்தி 3.39 கோடி பேலாக அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. கடந்த பருவ காலத்தில் இது 2.42 கோடி பேலாக இருந்தது.

**அரசு ஏல மையத்தில் 90% டீத்தூள் விற்பனை**

பதிவு செய்த நாள் 6/10/2011 2:02:11 AM



குன்னூர் : குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் நடந்த ஏலத்துக்கு வந்த டீத்தூள் 90 சதவீதம் விற்பனையானது. விலையும் உயர்ந்தது. நீலகிரி மாவட்டம் குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் வாரந்தோறும் டீத்தூள் ஏலம் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்திற்கு இலைரகம் 3.45 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 2.88 லட்சம் கிலோ என 6.33 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது.

உள்நாடு மற்றும் வெளிநாடு வர்த்தகர்கள் அதிகளவில் வந்திருந்தனர். 90 சதவீத டீத்தூள் விற்பனையானது. இலை ரகம் கிலோ ரூ.42 முதல் ரூ.45 வரை, உயர்ரகம் ரூ.55 முதல் ரூ.60 வரை, சாதாரகம் ரூ.45 முதல் ரூ.50 வரை, உயர்ரகம் ரூ.60 முதல் ஸி65 வரை விற்றது. இந்த வாரம் நடந்த ஏலத்தில் கிலோவுக்கு ரூ.2 வரை உயர்ந்துள்ளது .